அப்படிப்பட்ட நகர பஞ்சாயத்துக்களுக்கு அரசு 50 சதவீதம் மானியமாகத் தர முடிவெடுத்திருக்கின்றது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. மு. ஜான் வின்செண்ட்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நிதிவசதி குறைவாக இருக்கிற நகர பஞ்சாயத்துக்களில், நெல்லை மாவட்டத்தில் நான்குனேரி தொகுதியில் 4 நகரப் பஞ்சாயத்துக்கள் இருக்கின்றன. அதற்கு இதுவரை நிதிநிலை சரி இல்லை என்று சொல்கிறபடியால், குடிநீர் வடிகால் வாரியத்திலிருந்து உடனடியாக வசதி செய்து கொடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அரசின் கொள்கையைச் சொல்லிவிட்டேன். அந்த நல்ல முறையில் பயன்படுத்திக் கொள்வது மாண்புமிகு உறுப்பினர்களுடைய திறமையாகும்.

திருவண்ணாமலையில் குடிநீர் பற்றாக்குறையைப் போக்க திட்டம்.

*வினா எண் 33—திரு. த. வேணுகோபால்: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருவண்ணாமலையில் குடிதண்ணீர் பற்றாக்குறையைப் போக்கி நிரந்தர குடிதண்ணீர் கிடைக்க அரசிடம் திட்டம் ஏதும் உள்ளதா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, திருவண்ணாமலை நகராட்சியில் குடிநீர் விநியோகத்தை அதிகரிக்க ரூ. 7.192 இலட்சம் மதிப்பீட்டில் ஒரு குடிநீர் மேம்பாட்டுத் திட்டத்திற்கு அரசு அனுமதியளித்துள்ளது.

இந்நகராட்சிக்கு நிரந்தரமாக குடிநீர் வழங்கும் திட்டம் குடிநீர் வடிகால் வாரியத்திடம் ஆய்வில் உள்ளது.

திரு. த. வேணுகோபால்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆய்வுகள் எப்போது முடியும்? இந்த வேலை எப்போது முடிப்பதற்கு அரசு முன்வரும் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 5 ஆழ்துளைக் கிணறுகள் சமுத்திரம் குகைப்படுகையில் போட ரூ. 2.692 இலட்சம் ரூபாயும், பொன்னியார் திட்டத்தின் மூலம் வழங்கும் குடிநீரை

1983 சனவரி 28]

மேம்படுத்துத் திட்டத்திற்காக ரூ. 4·5 இலட்சம் ரூபாயும் வழங் அரசு ஆணையிட்டிருக்கிறது. அதை வைத்து 'ஆகுமென்டேஷன் ஸ்கீம்' அதாவது குடிநீரை அதிகமாகக் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. ஆனால் மின்சாரத் தட்டுப்பாட்டைத் தவிர்க்க தனியாக மின்விசை அளிக்க ரூ 1·5 இலட்சம் செலவில் பொன்னியார் தலைமைப் பணியிடத்தில் சப்-ஸ்டேஷனிலிருந்து தனியாக ஒரு ஹட் ஓர்க்ஸ்வரை ஒரு பீடர்லைன் சொண்டுவந்து மின்சாரத்தை உபயோகப்படுத்தி, தண்ணீரை கொடுப்பதற்கு உடனடியாக ஏற்பாடு செய்வதற்கு எல்லா முயற்சிகளும் செய்யப்பட்டு வருகின்றன.

திரு. கே. நாராயணசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, திருவண்ணாமலை தொகுதியில் குடி தண்ணீர் தட்டுப்பாடு இருப்பதால், *** அமைச்சர் அவர்கள் உடனடியாக ஒரு ஜெனரேட்டரை வாங்கிக்கொடுக்க ஆவன செய்வாரா என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள் கூறுவது குற்றச்சாட்டு போல இருக்கிறது. ஆகவே அதனை நீக்கிவிட்டு, வேறுவிதமாக கேள்வியாகக் கேட்கக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: கேள்வி நேரத்தில் குற்றச்சாட்டுகள் வரக்கூடாது. ஆகவே அதனைநீக்கிவிடுகிறேன். திரு . நாராயணசாமி அவர்கள் திரும்பவும் வேறு விதமாக கேள்வியாகக் கேட்கவும்.

திரு. கே. நாராயணசாமி: நான் குற்றச்சாட்டாகச் சொல்ல வில்லை, என்னுடைய கோரிக்கையைத்தான் கூறினேன். கேள்வி யாக மாற்றிவிடுகிறேன். திருவண்ணாமலையில் இருக்கும் குடி தண்ணீர் தட்டுப்பாட்டை போக்க ஒரு ஜெனரேட்டர் வாங்கி வைக்க அமைச்சர் அவர்கள் உத்தரவிடுவாரா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, திருவண்ணாமலையில் இருக்கும் குடிதண்ணீர் தட்டுப்பாட்டை உடனடியாக போக்குவதற்கு உடனடியாக ஏதாவது செய்தாக வேண்டும் என்பதுதான் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையாக இருக்க வேண்டும். அதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுக்கப்பட்டிருக்கின்றன. நான் ஏற்கெனவே சொன்னது போல் 7·192 லட்சம் செலவில் ஆக்குமென்டேஷன் ஒருதிட்டம் போடப்பட்டிருக்கிறது. எனர்ஜி– மின்சார தட்டுப்பாட்டை மனதில் வைத்து ஃபீடர் லைன் கொண்டுவந்து போடவும் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. ஆனால் இவைகள் எல்லாம் டெம்பரரி ஏற்பாடுகள்தான் நிரந்தரமான ஏற்பாடு அந்த ஊருக்கு செய்யவேண்டும் என்ற

*** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

காரணத்தால், ரூ. 4 கோடி அளவில், ஒரு திட்டம் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தினால் தயாரிக்கப்பட்டு வருகிறது என்கிற நல்ல செய்தியினை, அந்தத் தொகுதியின் மாண்புமிகு உறுப்பினர்களுக்கு நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

திரு. த. வேணுகோபால்; துணைத் தலைவர் அவர்களே அமைச்சர் அவர்கள் பெண்ணை ஆற்றிலிருந்து திருவண்ணாமலைக்கு குடிநீர் கொண்டுவரும் பிரச்னையைப் பற்றி கூறும்போது, அங்கே அதற்காக ஜெனரேட்டர் வாங்கப்போவதாக கூறினார்கள். அந்தப் பணி உடனடியாக செய்து முடிக்கப்படும் என்றும் கூறினார்கள். அந்த ஜெனரேட்டரின் மதிப்பீடு எவ்வளவு? எப்பொழுது இது வாங்கி வைக்கப்படும் என்று அறிவிப்பாரா?

மாண்புமிகு திரு எஸ். இராகவானந்தம்: துணைத் தலைவர் அவர்களே, ஜெனரேட்டர் வாங்கப்படுவாக நான் சொல்லவில்லை. ஃபீடர் லைன் போட்டு சுமார் $1\frac{1}{2}$ இலட்சம் ரூபாய் செலவில் உடனடியாக குடிநீர் கொடுக்க ஒரு ஏற்பாடு செய்யப்படும் என்று சொன்னேன்.

தென்மாநில நதிகளை இணைக்கும் திட்டம்

* வினா எண் 34—திரு. செ. செம்மலை: மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்மாநில நதிகளை இணைக்கும் முயற்சிக்கு விவரங்கள் திரட்ட மத்திய அரசு ஏதேனும் குழுவை அனுப்பியிருக்கிறதா?

(ஆ) மத்திய அரசு மாநில அரசை அது பற்றிய விவரங்களைக் கேட்டு எழுதியுள்ளதா?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: (அ) இல்லை.

(ஆ) ஆம். மத்திய அரசு கேட்ட விவரங்கள் யாவற்றையும், தமிழக அரசு மத்திய அரசுக்கு அனுப்பியுள்ளது.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தென் மத்திய நதிகளான காவிரி, பெண்ணை, வைகை, தாமிரபரணி, இவைகளையெல்லாம் இணைக்கிற ஒரு திட்டத்திற்கு நமது அரசாங்கம் ஏதாவது ஆலோசனை நடத்தியதா? அதன் செயற்குறிப்பு எந்த அளவில் ஆய்வில் இருக்கிறது? அதன் நிலை என்ன என்பதை தெரிந்துக் கொள்ளவிரும்புகிறேன். அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா?